நான்குநேரி ஊராட்சி ஒன்றியம் தளபதிசமுத்திரம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் செயல்முறை ஆணைகள்

பிறப்பிப்பவர்: திரு.கா.பாலகிருஷ்ணன்

ந.க.எண். 03/2025

நாள்: 04-08-2025

பொருள் : மனை வரன்முறை - நான்குனேரி ஊராட்சி ஒன்றியம் - நான்குனேரி வட்டம் - தளபதிசமுத்திரம் ஊராட்சி தளபதிசமுத்திரம் பகுதி 2 சர்வே எண் 111/1 இல் 6911.61 ச.மீட்டரில் அமையவுள்ள 42 மனைகளை வரன்முறைப்படுத்திட திருநெல்வேலி நகர் ஊரமைப்பு ஆணையின் படி ஒப்புதல் பெறப்பட்டது - மனையை கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கி உத்தரவிடல்

பார்வை :

1. அரசாணை நிலை எண். 79 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை (JD4(3) நாள்: 04.05.2017.
2. திருநெல்வேலி நகர் ஊரமைப்பு துணை இயக்குநரின் ஒப்புதல் கடிதம் ந.க.எண்.BN1XV4GV/2025/2025/TCP நாள்: 03.07.2025
3. ம.வ.திலி.மா.ந.ஊ.அ.எண். SWP/65/2025
4. திரு.D. யோபு தேவபிரகாசம் த/பெ தேவதாசன் 104, தெற்குதெரு தெற்கு காடுவெட்டி, 627152. என்பவரது மனு நாள்: 07.07.2025

ஆணை:

திருநெல்வேலி நகர் ஊரமைப்பு பகுதி, நான்குநேரி ஊராட்சி ஒன்றியம், தளபதிசமுத்திரம் ஊராட்சி சர்வே எண் 111/1 இல் 6911.61 ச.மீட்டரில் அமையவுள்ள 42 மனைகளை வரன்முறைப்படுத்திட பார்வை 3-இல் காணும் ஆணையின்படி வரன்முறைப்படுத்திட கொள்கை அளவிலான ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

தற்போது மேற்காணும் சர்வே எண்ணில் உள்ள மனைகளை முறைப்படுத்திட கீழ்காணும் விபரப்படி உரிய அரசு தலைப்புகளில் கட்டணங்கள் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

வ. எ ண்	மனை எண்கள்	சர்வே எண் மற்றும் உட்பிரிவு	கூராய்வு கட்டணம் மனு செய்யும் போது செலுத்தப்பட்ட விபரம் ரூ.	மனையின் பரப்பளவு ச.மீ	Layout Approval Fees Rs.	Payment Chellan ID/ Date	Estimate Fees Rs.	Payment Chellan ID/ Date
1	1 முதல் 42 வரை	111/1	3000	6911.61	172800.00	BN1XV4GV / 31.07.2025	42000.00	BN1XV4GV / 16.07.2025
மொத்தம்			3000		172800.00		42000.00	

laxy A73 5G
2 pm

தளபதிசமுத்திரம் ஊராட்சி தளபதிசசமுத்திரம் பகுதி 2 சர்வே எண் 111/1-ல் உள்ள மனைகளை நிபந்தனைகள் அடிப்படையில் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கி இதன் வழி ஆணையிடப்படுகிறது.

பார்வை 2 மற்றும் 3-ல் காணும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் இவ்வாணைக்கு பொருந்தும் என தெரிவிக்கப்படுகிறது. மனுதாரர் சமர்பித்துள்ள நில உடமை/நில உரிமை ஆவண நகல்களின் எண் 1017/2025 அடிப்படையில் இவ்வாளை வழங்கப்படுகிறது.

நிபந்தனைகள் :

1. அரசாணை நிலை எண். 79 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்: 04.05.2017ல் குறிப்பிட்டுள்ள மனைப்பிரிவு, வரன்முறைப்படுத்துதல் விதி எண் 4 மற்றும் 6ல் குறிப்பிட்டுள்ள இனங்கள் பாதிக்கும் வண்ணம் இருப்பின் அந்த மனையின் கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன் அறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.
2. நில உரிமம் குறித்து உறுதி செய்யும் பொறுப்பு மனுதாரரை சார்ந்ததாகும்.
3. மனைப்பிரிவின் குறுக்கே முழுமைத்திட்ட / பிரிவு அபிவிருத்தி திட்ட சாலைகள் மற்றும் பூங்கா அமையுமாயின் அம்மனையின் வரன்முறை எவ்வித முன் அறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.
4. மனைப்பிரிவிற்கு மற்றும் மனைகளுக்கு செல்லும் அணுகுசாலை குறித்தான உரிமம் மனுதாரரால் உறுதி செய்து கொள்ளப்பட வேண்டும்.
5. நீதிமன்ற வழக்கு ஏதும் இருப்பின் மனுதாரரை சார்ந்ததாகும்.
6. மனைபிரிவுகள் குறுக்கே உயர்மின் அழுத்த கம்பி பாதை, கோபுர பாதை செல்லுமாயின் அம்மனையின் வரன்முறை எவ்வித முன் அறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.
7. மனை/ மனைப்பிரிவின் குறுக்கே போக்கு கால்வாய் அமையுமாயின் அதற்கு இடையூறின்றி பாதுகாக்கப்பட வேண்டும்.

04/08/25

தலைவர்
ஊராட்சி மன்றம்
தளபதிசமுத்திரம்

04/08/25

பெறுநர்:

1. திரு. D. யோபு தேவபிரகாசம்
   த/பெ தேவதாசன்
   104, தெற்குதெரு,
   தெற்கு காடுவெட்டி.

நகல்:

1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திருநெல்வேலி.
2. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருநெல்வேலி அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது
3. வட்டார வளர்ச்சி அலுவலர்(கிஊ) நான்குநேரி இருப்பு கோப்பிற்கு.

Galaxy A73 5G
:22 pm